தினமணி

# ஜெயின் பல்கலை.க்கு 'ஏ' கிரேடு அங்கீகாரம்

பெங்களூரு, ஆக. 16: பெங்களூரு ஜெயின் பல்கலைக்கழகத்துக்கு ஏ கிரேடு அங்கீகாரத்தை தேசிய மதிப்பீடு மற்றும் அங்கீகார சபை (என்.ஏ.ஏ.சி), பல்கலைக்கழக மானியக் குழு ஆகியவை வழங்கியுள்ளன.

பெங்களூரு உள்ள ஜெயின் பல்கலைக்கழகத்தை ஜூன் மாதம் 8-ஆம் தேதி முதல் 10-ஆம் தேதி வரை தேசிய மதிப்பீடு மற்றும் அங்கீகார சபை உறுப்பினர்கள் 8 பேர் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் ஜெயராம் ரெட்டி தலைமையில் ஆய்வு செய்தனர். ஆய்விற்கு பிறகு 4 புள்ளிகளுக்கு 3.31 என்ற புள்ளிகளை வழங்கி, ஜெயின் பல்கலைக்கழகத்திற்கு ஏ கிரேடு அங்கீகாரத்தை வழங்கியுள்ளனர்.

இதுகுறித்து ஜெயின் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் என். சுந்தரராஜன் செய்தியாளர்களிடம் கூறியது:

பெங்களூரின் சிறந்த பல்கலைக்கழங்களில் ஒன்றாக விளங்கும் ஜெயின் பல்கலைக்கழகத்திற்கு ஏ கிரேடு அங்கீகாரத்தை தேசிய மதிப்பீடு மற்றும் அங்கீகார சபை, பல்கலைக்கழக மானியக்குழு ஆகியவை வழங்கியுள்ளன. இது மாநிலத்திற்கே பெருமை அளிப்பதாகும். கர்நாடகத்தில் உயர் கல்வியில் சிறந்து விளங்கும் ஜெயின் பல்கலைக்கழகத்திற்கு ஏ கிரேடு அங்கீகாரம் கிடைத்துள்ளது மகிழ்ச்சி அளித்துள்ளது.

இதைத் தொடர்ந்து எங்களுக்கு மேலும் பொறுப்பு கூடியுள்ளதை உணருகிறோம். சிறந்த, தரமான கல்வியை மாணவர்களுக்கு வழங்குவதோடு, உயர் கல்வியில் மாநிலத்திற்கு பேரும், புகழையும் பெற்றுத் தருவோம் என உறுதியளிக்கிறேன் என்றார்.